மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 08 வெள்ளிக்கிழமை 25.08.2023 அதிர்வு 25

## இராணுவத் தலைமையகத்திற்கு அருகில் சூடு; ஒருவர் உயிரிழப்பு

பத்தரமுல்லை இராணுவத் தலைமையகத்திற்கு அருகில் இன்று காலை நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் காயமடைந்த ஒருவர் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட 04






### வடக்கு, கிழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து

# சரத் வீரசேகரவுக்கு எதிராக சட்டத்தரணிகள் போராட்டம்



முல்லைத்தீவு நீதிபதியை அவமதித்து நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்த கருத்துக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து அடையாளக் கண்டனப் போராட்டத்தில் வடக்கு, கிழக்குச் சட்டத்தரணிகள் இன்று ஈடுபட்டனர். 04



# முடிந்தால் நாடாளுமன்றத்துக்கு வெளியில் வந்து கதையுங்கள்!

### சரத் வீரசேகரவுக்கு வவுனியா சட்டத்தரணிகள் சவால்

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றுக்குள் இருந்து கொண்டு கதைக்காமல் தைரியமிருந்தால் வெளியில் வந்து கதைக்குமாறு வவுனியா சட்டத்தரணிகள் சங்கம் சவால் விடுத்துள்ளது.

முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக சரத் வீரசேகர எம்.பி. நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்குக் கண்டனம் தெரிவித்து வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தினர் இன்று நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து வவுனியா நீதிமன்றம் முன்பாக அடையாளக் கண்டனப் போராடடத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்தபோதே வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அன்ரன் புனித நாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நிலுவையில் உள்ள குருந்தூர்மலை 04

## யானை தாக்கி ஒருவர் மரணம்

கந்தகெட்டிய பகுதியில் காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உமாஓயாவில் தமது நண்பர்களுடன் மீன் பிடிக்க 04



# கஜேந்திரகுமாரின் கொழும்பு வீட்டுக்கு முன்பாகப் பதற்றம்

### தேரர் தலைமையிலான குழுவினர் போராட்டம் பொலிஸார் குவிக்கப்பட்டுப் பலத்தபாதுகாப்பு


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பிலுள்ள வீட்டுக்கு முன்பாக இன்று பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. 04


உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# தமிழ் நீதிபதிகளை அச்சுறுத்தும் சரத் வீரசேகரவைக் கைது செய்!

## யாழ். நீதிமன்றம் முன்பாக அடையாள உண்ணாவிரதம்





(எஸ்.நிதர்ஷன்)

நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையீடு செய்து நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுக்கும் மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவை உடனடியாகக் கைது செய்யுமாறு வலியுறுத்தி அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு. தம்பிராசா யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக இன்று அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

"தமிழ் நீதிபதிகளை அச்சுறுத்தும் சரத் வீரசேகரவைக் கைது செய்", "இனக் கலவரத்துக்கு ஏதுவாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வீட்டை முற்றுகையிட முனையும் அனைவரையும் உடனடியாகக் கைது செய்து நீதியின் முன் நிறுத்து" உள்ளிட்ட கோஷங்கள் அடங்கிய பதாதைகளைக் காட்சிப்படுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

# மட்டக்குளியில் குழு மோதல் ஒருவர் கொலை; சிலர் காயம்

கொழும்பு, மட்டக்குளியில் குழு மோதலில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மட்டக்குளி-பர்கியூசன்வீதியில்உள்ள தோட்டம் ஒன்றில் சில குழுக்களுக்கு இடையில்கடந்த இருவாரங்களாக முரண்பாடுகள் இடம்பெற்று வந்துள்ளன.

இதன் தொடர்ச்சியாக இன்று காலை இந்தத் தோட்டத்தில் நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் இனவாத ரீதியிலான பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தமோதலில்மேலும் சில இளைஞர்கள் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள மட்டக்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதி, இந்தப் பகுதிக்கு முழுமையான பாதுகாப்பை வழங்க ஏற்பாடு செய்துள்ளார்.






# வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி யானை தாக்கி சாவு


மட்டு. வேத்துச்சேனையில் சம்பவம்

மட்டக்களப்பில், வேத்துச்சேனை கிராமத்தில் நேற்று வியாழக்கிழமை இரவு காட்டு யானைகள் புகுந்து அட்ட காசம் செய்தன. யானைகளைக் கட்டுப் படுத்துவற்கு களத்தில் இறங்கி முயற் சித்த வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்களில் ஒருவர் யானை தாக்கி அந்த இடத் திலேயே உயிரிழந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங் கரை பகுதியில் அமைந்துள்ள போர தீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட வேத்துச்சேனை கிராமத்துக்குள் நேற்று வியாழக்கிழமை இரவு காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் செய் துள்ளன.

இதனால் அந்த கிராம மக்கள் யானைகளை கட்டுப்படுத்துவதற்காக வெல்லாவெளியில் அமைந்துள்ள வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள காரியாலயத்துக்கு அறிவிக்க. அந்த இடத்துக்கு விரைந்த திணைக்கள உத்தியோகத்தர்கள் யானைகளை கட்டுப்படுத்தி விரட்ட முயன்றுள்ளனர்.

அவ்வேளை கட்டுப்படாத காட்டு யானையொன்று அந்த உத்தியோகத் தர்களை எதிர்த்து தாக்கியுள்ளது.

இதில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் வெல்லாவெளி காரியாலய உத்தியோகத்தர் ஒருவர் யானை தாக்குதலுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நுவரெலியாவைச் சேர்ந்த 30 வய தான செல்வராஜ் சிறிதரன் என்பவரே இதன்போது உயிரிழந்தவர் ஆவார்.

மற்றுமொரு உத்தியோகத்தர் தெய்வா தீனமாக உயிர் பிழைத்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் இன்று முற்பகல் மட்டக்களப்பு போதனா வைத் தியசாலையின் பிரேத அறையில் வைக் கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவில் மிக நீண்ட காலமாகவே காட்டு யானை களின் தாக்குதல்களும் அட்டகாசங்க ளும் இடம்பெற்று வருகின்றன. காட்டு யானைகளால் அப்பகுதி மக்களின் வீடுகள், பயிரினங்கள் சேதமடைந் தமை மட்டுமன்றி, அவர்களின் வாழ்வாதா ரமும் பாதிக்கப்பட்டிருப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# இனவாதக் கருத்து வெளியிடுவோரை ஜனாதிபதி கட்டுப்படுத்தாதமை ஏன்?

## ரெலோ இளைஞர் அணித் தலைவர் சபா.குகதாஸ் கேள்வி

தமிழர்களுக்கு எதிராக இனவாத கருத்துக்களை வெளியிடும் இனவாதி களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஏன் கட்டுப்படுத்தவில்லை என ரெலோ இளைஞர் அணித் தலைவர் சபா. குகதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று (24) அவர் வெளியிடுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு–

இலங்கை வரலாற்றில் தென்னி லங்கையில் மக்களின் அறவழிப் போராட்டத்தால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய துரத்தப்பட்ட பின்னர் அரகல தரப்பு ஏனையோரையும் விரட்ட தீவி ரம் பெற்ற போது பதில் ஜனாபதியாக பொறுப்பேற்று ஒரு சில நாள்களில் நீண்டநாள் போராட்டக்காரரை விரட்டி வீட்டுக்கு அனுப்பினார் ரணில் விக்கி ரமசிங்க.



ஆனால் தற்போது ஒரு இனத்தை குறி வைத்து குறிப்பாக தமிழர்களை கொதிப்படைச் செய்யும் வகையில் இனவாதிகள் வெளியீடும் இனவா தக் கருத்துக்களை ஏன் கட்டுப்படுத்த வில்லை என்ற சந்தேகம் தமிழர்களிடம் ஒரு அச்சத்தை தோற்றுவித்துள்ளது. மாறாக மறைமுக சுதந்திரம் இனவாதி களுக்கு ஜனாதிபதி வழங்கியுள்ளாரா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

தமிழ் மக்களையும் அவர்களது தொன்மையான தொல்லியல்களையும் தமிழ் அரசியல் பிரதி நிதிகளையும் தமிழ் நீதிபதியையும் குறி வைத்து மிகப் பாரதூரமான கருந்துக்களை மேர்வின் சில்வா, சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச பொது வெளியிலும் நாடாளுமன்றத்திலும் கூறிவருகின்றனர்.

இதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு ஒரு ஒப்புக்கு கூட எதிர்க்கவில்லை. எனவே மீண்டும் தமிழர்களை அடக்கி அவர்களின் இருப்பை கபளீகரம் செய்ய முழு அரச இயந்திரமும் தயாரா? அத் துடன் இனவாதிகளின் கருத்துக்களுக்கு வெளிநாட்டுச் சக்திகளும் மறைமுக ஆதரவா?

மீண்டும் ஒரு இனத்தை அழித்து தங்கள் பூகோள நலன்களை பெற முயற்சிக்கின்றார்களா? இப்படியான கேள்விகள் அச்சங்கள் தமிழ் மக்களி டையே எழுந்துள்ளன.

நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி கருத்து வெளியிடுவது ஒரு புறம் இருக்க பொது வெளியில் தமிழர்களின் தலையை வெட்டி கள னிக்கு கொண்டு வருவேன் என கூறிய மேர்வின் சில்வாவுக்கு எதிராக ஏன் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வில்லை.– என்றுள்ளது.

# துப்பாக்கிகள், கத்திகள் குருநாகல் பகுதியில் மீட்பு

கழிவு நீரை அகற்றுவதற்காக வெட்டப்பட்டிருந்த குழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன எனக்கூறப்படும் 2 துப்பாக்கிகள், கத்தி மற்றும் பல உபகரணங்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன.

குருநாகல், மல்லவப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றை புதிதாக வாங்கிய ஒருவர் கழிவுநீரை அகற்றுவதற்காக வெட்டியிருந்த குழியில் சந்தேகத்திற்கு இடமாகப் பொதி செய்யப்பட்ட பையொன்று இருப்பதை அவதானித்து குருநாகல் பொலிஸாரிடம் முறைப்பாடு அளித்துள்ளார்.

அந்தத் தகவலின் அடிப்படையில் கைத்துப்பாக்கிகள், ஏழு கத்திகள், 12 துப்பாக்கி தோட்டாக்கள், உள்ளிட்ட பல பொருட்கள் குருநாகல் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சரத்வீரசேகரவுக்கு...

வடக்கு, கிழக்கில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள நீதிமன்றங்களுக்குப் முன்பாக இந்தக் கண்டனப் போராட்டத்தைச் சட்டத்தரணிகள் முன்னெடுத்தனர்.

இதன்போது நீதித்துறை சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்படுவதுடன், நீதித்துறையில் கடமையாற்றுகின்ற நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் சுதந்திரமாகச் செயற்பட இடமளிக்கப்பட வேண்டும் எனவும் சட்டத்தரணிகளால் வலியுறுத்தப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கடந்த 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக அவதூறு பரப்பும் வகையிலும், நீதித்துறை சுதந்திரத்தைக் கேள்விக்குட்படுத்தும் வகையிலும் ஆற்றிய உரையைக் கண்டித்து நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து அடையாளக் கண்டனப் போராட்டத்தை மேற்கொள்வதென முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் ஏகமனதானத் தீர்மானம் எடுத்திருந்தது. அத்தோடு குறித்த போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஏனைய சட்டத்தரணிகள் சங்கங்களுக்கும் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் அழைப்பும் விடுத்திருந்தது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினர் இன்று நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து அடையாளக் கண்டனப் போராட்டத்தை முல்லைத்தீவு நீதிமன்றத்தின் முன்பாக மேற்கொண்டனர்.

இதற்கு ஆதரவளிக்கும் வகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகள் சங்கத்தினர் நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து தத்தமது நீதிமன்றங்களுக்கு முன்பாக அடையாளக் கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு, கிழக்கில் இன்று போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள், "இனவாதம் பேசி நீதித்துறை சுதந்திரத்தை அழைக்காதே", நீதித்துறையின் சுயாதீன செயற்பாட்டுக்குத் தடையேற்படுத்தாதே", "தலையிடாதே தலையிடாதே நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடாதே", சுயாதீன நீதித்துறையின் செயற்பாட்டை உறுதி செய்யுங்கள், "நாடாளுமன்றச் சிறப்புரிமையைத் துஷ்பிரயோகம் செய்யாதே", "நீதித்துறையின் சுதந்திரத்துக்குக் களங்கத்தை ஏற்படுத்தாதே", "நீதித்துறை சுதந்திரம் ஓங்குக", "கௌரவ நீதிபதிகளை அவபதிக்காதே", "கௌரவ நீதிபதிகளின் கட்டளைக்கு மதிப்பளி", "கௌரவ நீதிபதிகளின் கடமையில் தலையிடாதே" உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பாதாதைகளைத் தாங்கி நின்றனர்.

அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தொடர்ந்தும் முல்லைத்தீவு நீதிபதியை அவமதிக்கும் வகையிலும், நீதித்துறையின் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலும் செயற்படுவது கண்டனத்துக்குரியது எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

சட்டத்தின் ஆட்சியையும், ஜனநாயகத்தையும் கடைப்பிடிக்க வேண்டிய, சட்டத்தை உருவாக்கும் நாடாளுமன்றத்தில் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதிக்கும் வகையில், நீதிபதியின் தனிப்பட்ட சுயாதீனத் தன்மையைக் கேள்விக்குறியாக்கும் வகையில் கருத்துக்கள் முன்வைக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் எனவும், சரத் வீரசேகரவின் கருத்து நீதித்துறைக்கு ஏற்பட்ட பாரிய அவமானம் எனவும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு சிறப்புரிமையைத் துஷ்பிரயோகம் செய்கின்ற விடயம் நாடாளுமன்றாலும், சபாநாயகராலும் கண்டிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

அதேவேளை நீதித்துறையிலிருக்கின்ற குருந்தூர்மலை தொடர்பான வழக்கு கடந்த 2018ஆம் ஆண்டிலிருந்து கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு காலத்துக்குக் காலம், கட்டளைகள் நடைமுறைப்பட்டு வந்துள்ளதை சட்டத்தரணிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

### கஜேந்திரகுமாரின்...

அந்தப் பகுதியில் சீலரத்ன தேரர் தலைமையிலான சிறு குழுவினர் எதிர்ப்பில் ஈடுபட்டமையை அடுத்து இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து அப்பகுதியில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸார், கலகம் அடக்கும் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பிலுள்ள வீட்டைச் சுற்றிவளைப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகள் இதற்கான நடவடிக்கையில் இறங்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

இந்நிலையில், சீலரத்ன தேரர் தலைமையிலான சிறு குழுவினர் இன்று அங்கு சென்று கஜேந்திரகுமார் எம்.பிக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அவர்கள் கஜேந்திரகுமார் எம்.பியின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டபோது பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதையடுத்துப் பொலிஸாருடன் அவர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

### முடிந்தால்...

தொடர்பான வழக்கை விசாரித்து வரும் நீதிபதியைப் பாதிக்கும் வகையிலான கருத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அத்துடன் அவர் நாடாளுமன்ற வரப்பிரசாதத்தைப் பயன்படுத்தியே இவ்வாறு கதைக்கின்றார். முடிந்தால் அவர் வெளியில் வந்து இவ்வாறு கதைக்க வேண்டும்.

அவரது உரை தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவருக்கு முகவுரையிடப்பட்டு ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர், நீதிச்சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு அதன் பிரதிகளை அனுப்பி இருக்கின்றோம். இந்தக் கடிதமானது வடக்கு, கிழக்கில் அமைந்துள்ள அனைத்து சட்டத்தரணிகள் சங்கம் சார்பிலும் அனுப்பப்படவுள்ளது." – என்றார்.

### யானை தாக்கி...

சென்று வீடு திரும்பும் போதே அவர் யானைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் கந்தகெட்டிய பகுதியை சேர்ந்த 42 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது

### இராணுவ...

நிலையில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்தவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தலங்கம பகுதியைச் சேர்ந்த 44 வயதான ஒருவரே இவ்வாறு துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

# ஆசிரிய வெற்றிடங்களுக்கு 8000 ஆசிரியர்கள் நியமனம்

அரச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்குப் பட்டதாரி ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, 5500 பட்டதாரி ஆசிரியர்களும், 2500 இரண்டாம் மொழி ஆசிரியர்களும் இணைத்துக்கொள்ளப் படவுள்ளனர் என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஓய்வுபெற்ற ஆசிரியர்களை மாகாண சபைகளுக்கு இணைத்துக் கொள்வதற்கான அதிகாரம் எதிர் வரும் இரண்டு வாரங்களில் வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் அரச வன்முறை

நாட்டில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொள்ளைகள், கும்பல் அடாவடிகள் அதிகரித்திருக்கின்ற சூழலில், இத்தகைய பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை அடுத்த ஆறு மாதத்துக்குள் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான விசேட நடவடிக்கை திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட இருப்பதாகத் தெரிய வருகின்றது.

பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் இணைந்து இந்த நடவடிக்கை மூலம் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை ஒட்ட நறுக்கி, முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆறு மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாக சர்ச்சைக்குரிய பொலிஸ் அதிகாரியான மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்திருக்கின்றார்.

இந்த வருடத்தில் மட்டும் ஆங்காங்கே திடீர் திடீரென இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். பல டசின் கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இத்தகைய வன்முறைகளுக்கு முடிவு கட்டுவதற்காகக் கண்டிப்பான நடவடிக்கைகளைத் தீர்க்கமாக எடுப்பது என அரசுத் தரப்பிலும், பொலிஸ் மேலிடத்திலும் முடிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இனி என்ன? தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைக் கையாண்ட மாதிரியே தென்னிலங்கையிலும் பாதாள உலகக் கோஷ்டியினர் எனப் பொலிஸார் கருதும் தரப்பினருக்கு எதிராக விடயங்கள் கட்டவிழும்.

தமிழர்களின் சுதந்திர உரிமைகளுக்கான ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை, அதன் உட்கிடையான நியாயங்களைப் புரிந்து கொள்ளாத சிங்களம், அதனை வெறும் ‘பயங்கரவாதம்’ எனச் சித்திரித்து, ‘பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தால் அடக்குவது’ என்ற விநோதக் கோட்பாட்டின் அடிப்படையில் அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டது. அரச பயங்கரவாதத்தின் கொடூரப் பண்பியல்பை - குரூர முகத்தை - தென்னிலங்கை இப்படி நியாயப்படுத்தியது.

இப்போது பாதாள உலக நடவடிக்கைகளை அதே பாணியில் எதிர்கொள்ளுதல் - கையாளுதல் - என்ற நியாயப்பாட்டில் அதே கொடூர முகம் இனிமேல் காட்டப்படும் என எதிர்பார்க்கலாம்.

பாதாள உலக கோஷ்டிகளின் கைவரிசையா அல்லது பாதாள உலகல் குழுவினருக்கு எதிரான ‘என்கவுண்டர்’களா என்று வேறுபடுத்திப் பிரித்தறிய முடியாத வகையில் இனிமேல் மோசமான வன்முறைகள் இங்கு தாராளமாக இடம்பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

நெருக்கடிகளைக் கையாள்வதற்கு சட்டத்தைத் தூக்கி ‘பொக்கற்றில்’ போட்டு விட்டுக் காரியமாற்றும் பண்பு கொழும்புக்குப் புதியதல்ல.

அதுதான் இனி நிச்சயம் இங்கு கட்டவிழும் என எதிர்பார்க்கலாம்.

‘பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளுக்கு முடிவு கட்டுதல்’ என்ற பெயரில் இனி இடம்பெறப் போகும் அரச பாதாள உலக நடவடிக்கைகளில் எத்தனை அப்பாவிகள் சிக்கிச் சீரழியப் போகின்றார்களோ, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!

# இரத்தினக் கல் ஏற்றுமதி மூலம் அதிக வருவாய் ஈட்ட எதிர்பார்ப்பு

இரத்தினக் கற்கள் ஏற்றுமதி மூலம் 2025 ஆம் ஆண்டளவில் 2 பில்லியன் அமெரிக்க டொலர் வருடாந்த வருமானத்தை ஈட்ட எதிர்பார்ப்பதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் விராஜ் டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவால் நடத்தப்பட்ட நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் இரத்தினக் கற்கள் ஏற்றுமதி மூலம் சுமார் 312 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தேசிய இரத்தினம் மற்றும் ஆபரண ஆணையம் இந்த ஆண்டு இறுதிக்குள் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டும் என கணித்துள்ளது.

இதேவேளை, சட்டவிரோத இரத்தினக்கல் ஏற்றுமதியை கட்டுப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது குறித்தும் அவர் கவனம் செலுத்தியுள்ளார்.

நாட்டுக்குள் ஏலம் விடுவதன் மூலம் வெளிநாட்டு கொள்வனவு செய்பவர்கள் நேரடியாக இரத்தினக் கற்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.

இதன்படி, வெளிநாட்டு கொள்வனவு செய்பவர்கள் இந்த நாட்டில் உள்ள ஏலங்களில் நேரடியாக இரத்தினக் கற்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோய்க்கு மருந்து தயாராகி வருகிறது!




டெங்கு நோய்க்கான தடுப்பு மருந்து தயாராகி வருகிறது என்று இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய நோயெதிர்ப்பு நிபுணர்கள் இந்த தடுப்பூசியை ஜனவரி 2026 ஆம் ஆண்டுக்குள் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

ஆரம்ப கட்டங்களில் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் பாதகமான சூழ்நிலைகள் எதுவும் பதிவாகவில்லை என்றும், 18 முதல் 50 வயதுக்குட்பட்ட 90 பேரிடம் இந்த சோதனை நடத்தப்பட்டதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

டெங்கு, நுளம்புகளால் பரவும் நோயானது, கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் ஒரு பெரிய பொது சுகாதாரப் பிரச்சனையாக மாறியுள்ளது. ஜனவரி மற்றும் ஜுலை 31 இற்கு இடையில், 31,464 டெங்கு வழக்குகள் மற்றும் 36 இறப்புகள் பதிவாகியுள்ளன என்று இந்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தடுப்பூசி தயாரிப்பாளரான இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் இம்யூனைசேஷன் அதன் டெங்கு தடுப்பூசியை 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வணிக ரீதியாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறது.

# இன்று சட்டத்தரணிகள் போராட்டம்



முல்லைத்தீவில்...









அக்கரைப்பற்றில்...







மன்னாரில்...





# இன்று சட்டத்தரணிகள் போராட்டம்



யாழ்ப்பாணத்தில்...



சாவகச்சேரியில்...



வவுனியாவில்...




கிளிநொச்சியில்...

# இனவாதம் பேசுவோர் தொடர்பில் கவனம் செலுத்தத் தேவையில்லை

## நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தெரிவிப்பு

(த.சுபேசன்)



இனவாதத்தை கக்கிக் கொண்டிருப்பவர்களை கணக்கில் எடுக்காமல் எமது இலக்கு நோக்கிப் பயணிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பருத்தித்துறை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்–

நாம் ஒரு பக்கம் பொருளாதார நெருக்கடி மறுபக்கம் உரிமை சார்ந்த பிரச்சனை என போராடிக்கொண்டிருக்கும் வேளையில் இன்னொரு பக்கம் சிலர் இனவாதத்தை கக்குகின்றனர்.

நாம் இவை எல்லாவற்றையும் கடந்து மேலேறி வர வேண்டும். அதற்கு நாம் எமது இலட்சியப் பாதையில் இருந்து மாறக்கூடாது.

இனவாதத்தைக் கக்குபவர்கள் சாதாரணமானவர்கள். அவர்களுக்கு பதில் சொல்லிக்கொண்டு இருக்க வேண்டிய தேவை இல்லை. மேர்வின் சில்வா சாதாரண நபர். சரத் வீரசேகர சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்.

நாம் வீதியால் செல்லும் போது நாய் குரைத்தால் எவ்வாறு கண்டு கொள்ளாமல் செல்வோமோ அது போல இவ்வாறானவர்களின் இனவாதக் கருத்துக்களையும் கண்டுகொள்ளாமல் எமது பாதையில் நாம் பயணிக்க வேண்டும்.

அவர்கள் இனவாதத்தை கக்குகின்றனர் என்று நாமும் இனவாதம் பேசினால் எமது இலட்சியப் பாதையில் பயணிக்க முடியாது. உணர்வு அரசியல் – உணர்ச்சி அரசியல் இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. நாம் கடந்த காலத்தில் இழந்தவற்றை எமது மனதில் வைத்துக் கொண்டு வெற்றிக்கான பாதை நோக்கிப் பயணிக்க வேண்டும். – என்றார்.

# மாவீரன் பண்டார வன்னியனின் 220 ஆம் ஆண்டு நினைவு கூரல்

முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த ஒல்லாந்தர் கோட்டையை போரிட்டு வெற்றி கொண்ட வன்னியின் இறுதி மன்னனான மாவீரன் பண்டார வன்னியனின் 220 ஆம் ஆண்டு வெற்றி நாள் நினைவு கூரல் இன்று முல்லைத்தீவு நகரில் இடம்பெற்றது.



பண்டார வன்னியனின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி நினைவு கூரப்பட்டது.

இதில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் இ.ஜெகதீசன், தமிழரசு கட்சியின் உறுப்பினர்களான கி.சிவகுரு, இ.ஜெரோன்சன், மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.



முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த ஆங்கிலேயரின் கோட்டையை 1803 ஆம் ஆண்டு இதேபோன்றதொரு நாளில் போரிட்டு கைப்பற்றி, இரண்டு பீரங்கிகளையும் மாவீரன் பண்டார வன்னியன் கைப்பற்றிய நாளாக இன்றையநாள் அடையாளப் படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் நினைவேந்தல் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஓ.பி.எஸ்ஸின் மேன்முறையீடுகள் அனைத்தும் உச்சநீதிமன்றில் 'அவுட்'!



சென்னை, ஓக.25

அ.தி.மு.க. பொதுக்குழுத் தீர்மானங்கள் மற்றும் பொதுச்செயலாளர் தேர்வுக்கு எதிராக முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட 4 பேர் தொடர்ந்த அனைத்து மேன்முறையீட்டு மனுக்களையும் சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அ.தி.மு.க.,வில் இருந்து பன்னீர் செல்வம் நீக்கப்பட்ட தீர்மானத்திற்கும் தடை விதிக்க நீதிபதிகள் மறுத்து விட்டனர்.

கடந்த ஆண்டு ஜூலையில் நடந்த அ.தி.மு.க. பொதுக்குழுவை எதிர்த்து, பன்னீர்செல்வம் தரப்பில் உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப் பட்டது. அதை விசாரித்த உச்ச நீதி மன்றம், ஜூலை 11 இல் கூட்டப்பட்ட பொதுக்குழு செல்லும் எனவும், தீர் மானங்கள் குறித்து உயர் நீதிமன் றத்தில் முறையீடு செய்து கொள்ள லாம் எனவும் உத்தரவிட்டது.

ஜூலை 11ல் நடந்த பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எதிர்த்து, பன்னீர்செல்வம், அவரது ஆதர வாளர்களான மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம் உள்ளிட்ட 4 பேர் சென்னை உயர்நீதிமன்றத்தில் முறை யிட்டனர்.

இதனை நீதிபதிகள் ஆர்.மகா தேவன், முகமது சபீக் ஆகியோர் கொண்ட அமர்வு விசாரித்தது. இந்த மனுக்கள் மீது 7 நாள்கள் நடந்த வாதத் திற்கு பிறகு, ஜூன் 28இல் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கில் நீதிபதி கள் இன்று தீர்ப்பு அளித்தனர். அதில் கூறியுள்ளதாவது: உச்சநீதிமன்றத்தின் உத்தரவு அடிப்படையில் பொதுக்குழு கூட்டம் நடந்தது. பொதுக்குழு செல்லும் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்ததால் அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களுக்கு தடை விதிக்க முடியாது.

தடை விதிப்பதற்கு எந்த வித முகாந் திரமும் இல்லை. பன்னீர்செல்வம் உள்ளிட்டவர்களை கட்சியில் இருந்து நீக்கும் தீர்மானங்களுக்கும் தடை விதிக்க முடியாது. - எனக்கூறிய நீதி பதிகள், அனைத்து மேல்முறையீட்டு மனுக்களையும் தள்ளுபடி செய்த னர்.

## நிலவில் ரோவர் தரையிறங்கும் காட்சி வீடியோவை வெளியிட்டது இஸ்ரோ!



பெங்களூரு, ஓக. 25

நிலவில் லேண்டரில் இருந்து எடுக்கப்பட்ட வீடியோவை இஸ்ரோ தனது டுவிட்டர் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

நிலவின் மேற்பரப்பில் சந்திரயான் 3 இன் லேண்டரில் இருந்து இறங்கி, நிலவில் நகர்ந்து ஆய்வு செய்யப் போகும் மிகச் சிறிய வாகனமான ரோவர், தரையிறங்கும் வீடியோவை வெளியிட்டது இஸ்ரோ. சந்திரயான் 3 இன் லேண்டரில் இருந்து ரோவர் நிலவின் மேற்பரப்பில் இறங்கும் காட்சியை வெளியிட்டுள்ளது. லேண்டர் திறந்து சாய்வுப் பலகை வழியே ரோவர் இறங்கி செல்லும் காட்சியை இஸ்ரோ வெளியிட்டது.

## சந்திரயான்-3 இன் மற்றொரு சாதனை

புதுடெல்லி, ஓக.25

சந்திரயான்-3 திட்டம் இந்தியாவினது மட்டுமின்றி உலக நாடுகளின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்து இருந்தது. நேற்று முன்தினம் மாலை 6.03 மணிக்கு லேண்டரை சந் திரனில் தரையிறங்கும் நிகழ்வை இஸ்ரோ தனது அதி காரப்பூர்வ யூடியூப் பக்கத்தில் நேரலையாக ஒளிபரப்பு செய் தது. இதனை 56 லட்சத்திற்கும் அதிகமானோர் கண்டு களித்தனர். இதற்கு முன்பு, ஸ்பெயின் நாட்டின் ஐபாய் யூடியூப் பக்கத்தில் 34 லட்சம் பேர் பார்த்து இருந்ததுதான் உலக சாதனையாக இருந்தது. அந்த சாதனையையும் சந்தி ரயான்-3 நேரலை முறியடித்து சாதனை படைத்துள்ளது.



### உலகக் கிண்ண செஸ்ஸில் 2ஆம் இடம்:

## வீரர் பிரக்ஞானந்தாவுக்கு பிரதமர் மோடி பாராட்டு

உலகக் கிண்ண செஸ் தொடரின் இறுதிப் போட்டியின் "டை பிரேக்கர்" சுற்றுப் போட்டிகள் நேற்று நடைபெற்றன. அதன் முடிவில் நோர்வேயின் மேக்னஸ் கார்ல்சன் வெற்றி பெற்றார்.

உலகக் கிண்ண செஸ் தொடரின் இறுதிப் போட்டி நான்கு சுற்றுகளாக நடைபெற்றது. முதல் இரண்டு சுற்றுகள் சமனில் முடிந்தன. இதைத் தொடர்ந்து நேற்று டை பிரேக்கர் சுற்று நடைபெற்றது. டை பிரேக்கர் சுற்றின் முடிவில் மேக்னஸ் கார்ல்சன் வெற்றி பெற்றார். தமிழக வீரர் பிரக்ஞானந்தா இரண்டாம் இடம் பிடித்தார்.

ஐந்து முறை சாம்பியன் பட்டம் வென்று இருந்த மேக் னஸ் கார்ல்சனுக்கு கடும் போட்டியை ஏற்படுத்தி கடை சித் தறுவாயில் இரண்டாவது இடம் பிடித்த தமிழக வீரர் பிரக்ஞானந்தாவுக்கு பலரும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில், உலகக் கோப்பை செஸ் தொடரில் சிறப்பாக விளையாடிய பிரக்ஞானந்தாவுக்கு பிரதமர் மோடி தெரிவித்து இருக்கிறார். அதில், "உலகக் கிண்ண செஸ் போட்டியில் சிறப்பாக விளையாடிய பிரக்ஞானந்தாவை நினைத்து நாங்கள் பெருமை அடைகிறோம். அவர் தனது திறமையை சிறப்பாக வெளிப்படுத்தி, தன்னை எதிர்த்து விளையாடிய மேக்னஸ் கார்ல்சனுக்கு கடும் போட்டியை ஏற்படுத்தினார். இது சிறிய தோல்வியே கிடையாது. அடுத்து வரும் போட்டிகளில் அவர் சிறப்பாக விளையாட வாழ்த்து கிறேன்," என்று தெரிவித்துள்ளார்.



# சரணடைந்த டிரம்புக்கு கைதின் பின் பிணை!

வாஷிங்டன்,ஓக.25

ஜனாதிபதித் தேர்தல் மோசடி வழக்கில் அமெரிக்க முன்னாள் அதிபர் டிரம்ப் சிறையில் சரணடைந்தார். அவர் உடனே கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அமெரிக்காவில் கடந்த 2017 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில், குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிட்டு டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றார். ஆட்சியில் இருந்தபோது டிரம்ப் மீது ஏராளமான குற்றச்சாட்டுகள் எழுந்தன.

மேலும் ஜோர்ஜியா மாகாணத்தில் கடந்த 2020 ஆம் ஆண்டு நடந்த தேர்தலின் முடிவை முறைகேடாக மாற்ற மோசடி செய்தார் எனவும் அவர் மீது புகார் கூறப்பட்டது. இந்த டிரம்ப் மற்றும் 18 பேர் மீது மோசடி வழக்கு பதியப்பட்டது. வழக்கு விசாரணை ஜோர்ஜியாவின் அட்லாண்டா நீதிமன்றத்தில் நடந்து வருகின்றது.

குற்றப் பத்திரிகையில் உள்ள 19 பேரிடமும் ஒரே நேரத்தில் விசாரணை நடத்த நீதிமன்றம் முடிவு செய்தது. எனவே டிரம்ப் உள்பட வழக்கில் தொடர்புடைய 19 பேருக்கும் பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. அதேசமயம் வருகிற 25 ஆம் திகதிக்குள் (இன்று) தாமாக முன்வந்து முன்னிலையாகவும் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஜோர்ஜியா தேர்தல் வழக்குத் தொடர்பாக அமெரிக்க நேரப்படி 24 ஆம் திகதி இரவு 7 மணியளவில் அட்லாண்டா சிறையில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் சரணடைந்தார். பலத்த பாதுகாப்புடன் சிறையில் சரணடைந்த நிலையில், சிறை அதிகாரிகள் அவரைக் கைது செய்து அவரது அடையாளங்களை பதிந்தனர். இதனால் சுமார் 20 நிமிடங்கள் பரபரப்பாக காணப்பட்டது. அதன்பின் 2 லட்சம் அமெரிக்க டொலர் பிணையாகச் செலுத்திய பின், அவர் விடுவிக்கப்பட்டார். விடுவிக்கப்பட்டதும், உடனடியாக விமானம் மூலம் நியூஜெர்சி புறப்பட்டார்.

# வாக்னர் குழுத் தலைவர் பிரிகோஜின் விபத்தில் மரணமா? படுகொலையா?

## புடினுக்கு எதிராகக் கிளர்ந்தமையால் இந்தக் கதியாம்



மொஸ்கோ, ஓக. 25

ரஷ்யாவில் அரசாங்கத்துக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்ட வாக்னர் குழுத் தலைவர் விமான விபத்தில் பலியானார். இவர் படுகொலை செய்யப்பட்டார் என அங்கு குற்றச்சாட்டுகள் எழுகின்றன. ரஷ்யாவில் வாக்னர் குழு என்ற தனியார் இராணுவ அமைப்புச் செயல்பட்டு வருகிறது. உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து இவர்கள் முக்கிய பங்காற்றினர்.

இந்த வாக்னர் குழுவின் தலைவராக யெவ்ஜெனி பிரிகோஜின் இருந்தார். இவர் அதிபர் விளாடிமிர் புடினுக்கு மிகவும் நெருக்கமானவர் ஆவார். ஆனால் இவர் திடீரென அதிபர் புடினுக்கு எதிராகப் புரட்சியில் இறங்கினார். அப்போது ரஷ்யாவின் தெற்கு பகுதியில் உள்ள ரோஸ்டோவ்-ஆன்-டான் அருகே உள்ள இராணுவத் தலைமையகத்தை வாக்னர் குழு கைப்பற்றியது.


மேலும் ரஷ்ய அரசாங்கத்தை எதிர்த்து 25 ஆயிரம் வீரர்கள் அணிவகுப்பில் ஈடுபட போகின்றனர் என பிரிகோஜின் அறிவித்திருந்தார். ஆனால் பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகாசென்கோ பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் இந்தப் புரட்சி கைவிடப்பட்டது.

எனினும் பிரிகோஜின் தங்களது முதுகில் குத்தி விட்டார் புடின் கண்டனம் தெரிவித்தார். இதனையடுத்து அவர் மீது தேசத்துரோகம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் அவர் மீதான வழக்குகள் ரத்து செய்யப்பட்டு பெலாரஸ் நாட்டுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டது. இதனால் பெலாரஸ் நாட்டில் தஞ்சம் அடைந்த அவர் அவ்வப்போது ரஷ்யாவுக்கு வந்து சென்றார்.

அதன்படி ரஷ்யா வந்திருந்த பிரிகோஜின் தனது குழுவினருடன் தனியார் விமானம் மூலம் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரத்துக்குக் கிளம்பினார். ஆனால் புறப்பட்ட சிறிது நேரத்தில் இந்த விமானம் கீழே விழுந்து நொறுங்கியது. இதில் பிரிகோஜின் உள்பட 10 பேரும் உடல் நசுங்கிப் பலியாகினர். இந்த விமானம் தீப்பிடித்து எரியும் காட்சிகள் அங்குள்ள சமூகவலைதளங்களில் வைரலாகப் பரவி வருகிறது. இதற்கிடையே அதிபர் புடினுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டமையாலேயே பிரிகோஜின் படுகொலை செய்யப்பட்டார் எனப் பல்வேறு குற்றச்சாட்டுகள் அங்கு எழுகின்றன. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், “இந்த விபத்துக் குறித்து நான் ஆச்சரியப்படவில்லை“ என்று சந்தேகத்தை எழுப்பி உள்ளார். ஆனால் ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் இதனை மறுத்துள்ளது.

# லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மதுபான விடுதியில் சூடு!

## 4 பேர் பலி; 6 பேர் படுகாயம்



வொஷிங்டன், ஓக. 25

அமெரிக்காவில் மதுபான விடுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிசூட்டில் 4 பேர் பலியாகினர்.

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியா மாகாணம் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பிரபல மதுபான விடுதி ஒன்றில் மர்ம நபர் ஒருவர் திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தினார். இதனால் அங்கிருந்தவர்கள் பயத்தில் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடினர். இதனையடுத்து அவர் தன்னையும் துப்பாக்கியால் சுட்டுகொண்டு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் துப்பாக்கிசூடு நடத்தியவர் உள்பட 4 பேர் பலியாகினர். மேலும் கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களுக்கு ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். முதல் கட்ட விசாரணையில் துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி என்பது தெரிய வந்தது.



# தீக் கோழியின் கால் அமைப்பில் சிம்பாப்வே நாட்டின் பழங்குடி இனத்தவர்

இந்த உலகில் என்னதான் அறிவியல் பூர்வமாக சில கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தாலும் இயற்கையாக உருவாகும் சில நிகழ்வுகளை மாற்றவே முடியாத நிலைதான் காணப்படுகிறது.

சிம்பாப்வே நாட்டில் வசிக்கும் பழங்குடி இனத்தவர்களில் ஒரு பகுதியினர் கலாசாரத்தில் மட்டுமன்றி உடல் ரீதியாகவும் மனிதர்களிடமிருந்து வேறுபட்டு காணப்படுகின்றனர்.

இதன்படி அவர்கள் மனிதனின் உடல் அமைப்பையும் நெருப்புக்கோழியின் கால்களையும் கொண்டுள்ளனர். அதுதான் உண்மை.

இவர்களுக்கு காலில் இரண்டு அல்லது மூன்று விரல்கள் மட்டுமே உள்ளன. டோமா பழங்குடியினர் என்று அழைக்கப்படும் இந்த பழங்குடியின மக்கள் வாடோமா அல்லது பாண்ட்வானா பழங்குடியினர் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

அவர்களின் பாதங்கள் நெருப்புக்கோழியின் பாதங்கள் போல இருப்பதால், அவர்கள் பெரும்பாலும் நெருப்புக் கோழி மக்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். இந்தப் பழங்குடியினர் சிம்பாப்வேயின் கன்யெம்பா பகுதியில் வசிக்கின்றனர்.

இவர்கள் மரபணு கோளாறால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால், அவர்களின் கால்களில் 5 இற்குப் பதிலாக 2 விரல்கள் மட்டுமே உள்ளன. இந்த மரபணு மாற்றம் லோப்ஸ்டர் க்ளா சிண்ட்ரோம் என்று அழைக்கப்படுகிறது. இந்த பிரச்சினையால் இந்த பழங்குடியினத்தில் குழந்தைகள் பிறக்கும் போதே, பாதங்களில் முழுமையாக ஐந்து விரல்களும் இருப்பதில்லை. இரண்டு அல்லது மூன்று விரல்கள் தான் இருக்கின்றன. அந்த விரல்களும் உள்நோக்கி வளைந்து காணப்படுகிறது.

டோமா பழங்குடியினரின் ஒவ்வொரு நான்காவது குழந்தைக்கும் இந்த பிரச்சினை இருப்பதாக நம்பப்படுகிறது. பெரும்பாலான மக்கள் தங்கள் கால்களில் 3 விரல்களோடு தான் காணப்படுகிறார்கள்.



இந்தப் பழங்குடியின மக்கள் வேறு சமூகத்தில் திருமணம் செய்துகொள்வதை விரும்புவதில்லை. ஏனெனில் இரட்டை விரல்களுடன் பிறப்பதை அவர்கள் வரமாக நினைக்கிறார்கள். அவர்கள் வேறு இன மக்களுடன் கலந்தால் தங்கள் இரட்டை விரல் வரத்தை இழந்து விடுவதாக அஞ்சுகிறார்கள். இவர்களால் சரியாக நடக்கவோ, காலணிகள் அணியவோ முடியாது. ஆனால் மரம் ஏறுவதில் இவர்களை மிஞ்ச யாருமில்லை.

# யோகக்கலை கற்கையின் புதிய பிரிவு ஆரம்பம்

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 23.09.2023 சனிக்கிழமை காலை 6 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயில விரும்புவோர் வடமாகாண கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத்தளத்திலோ விண்ணப்பப் படிவங்களை பெற்று கல்வி அமைச்சு, வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949